## சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்

18.12.2020

OS. 6/2016

வா.சா. 2 சரவணன்

குறுக்குவிசாரணை:

கிரய ஒப்பந்தம் போடப்பட்ட சொத்து சம்மந்தமாக சின்னவயதிலிருந்தே தெரியும். தாவா சொத்து குட்டியாகவுண்டரின் சொத்தாகும். குட்டியாகவுண்டருக்கு பிறகு அவரின் மகன்கள் பெரியகந்தன், சின்னகந்தன், நடுக்கந்தன் ஆகிய மூவரும் அந்த பூமியை ஓட்டிவருகின்றனர். அந்த பூமியின் பெயர் ஊரடிதோட்டம் ஆகும். ராஜுவின் பூமிக்கும் , தாவா பூமிக்கும் இடையே அரை கி.மீ. தூரம் மட்டுமே உள்ளது. ராஜுவுக்கும் தாவா பூமி சம்மந்தப்பட்ட விவரம் தெரியும். ராஜுவுக்கும், குட்டியாகவுண்டரின் வாரிசுகள் தாவா பூமியை ஓட்டிவரும் விவரம் தெரியும். சாட்சி தற்போது பூமி தரிசாக உள்ளதாக கூறுகிறார். வழக்கு தரப்பினர்கள் இருவரையும் தெரியும். பிரதிவாதியை கிரய ஒப்பந்தத்திற்கு 5 வருடங்களுக்கு முன்பாக தெரியும். தாவா சொத்து சம்மந்தமாக வழக்கு நடந்த விவரத்தை பற்றி பிரதிவாதி என்னிடம் சொல்லியிருக்கிறார். தாவா சொத்து சம்மந்தப்பட்ட ஆவணங்களை பிரதிவாதி என்னிடம் காண்பித்தார். பட்டா மாறுதல் ஆவணத்தை காண்பித்தார். சொத்து விவரத்தை வாய்மொழியாகத்தான் சொன்னார். அதன் அடிப்படையில்தான் கிரய ஒப்பந்தம் தயார் செய்யப்பட்டது. அதை தவிர சொத்து சம்மந்தமான எந்த ஆவணத்தையும் நானோ, வாதியோ பார்க்கவில்லை என்றால் சரிதான்.

சொத்து சம்மந்தமாக பேச்சுவார்த்தை நடந்த சமயங்களில் எல்லாம் நான், வாதி, பிரதிவாதி ஆகியோர் கலந்துதான் பேசுவோம் என்றால் சரிதான். கடைசியாக , தாவா ஒப்பந்தத்தை பணம் கொடுக்கும்போதும், புதுப்பிக்கும்போது பார்த்தேன். தாவா கிரய ஒப்பந்தத்தை புதுப்பிக்கும்போது பிரதிவாதி எதற்காக முத்திரைத்தாள்கள் வாங்கவேண்டும் என்று கேட்டார் என்ற விவரத்தை தெரிந்துகொண்டேன். சார்பதிவாளர் அலுவலகத்தில் முத்திரைத்தாளுக்கு பிரதிவாதி பணம் கட்டினாரா என்று கேட்டு தெரிந்துகொண்டேன். கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட காலத்திற்கும், முத்திரைத்தாள் வாங்கப்பட்ட காலத்திற்கும் இடையே வழக்கு விவரம் பற்றி வாதி சொன்னாரா என்றால் வழக்கை முடித்துத்தருவதாக வாதி சொன்னார். கிரய ஒப்பந்தம் புதுப்பிக்கப்படும்போதும் வழக்கு நிலுவையில் இருந்த விவரம் பற்றி சொன்னார். நானும், வாதியும் வழக்கு நிலுவையில் இருக்கும்போது ஏன் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பணம் செலுத்தவேண்டும் என்று நான் வாதியிடம் கேட்டேன். பத்திர மதிப்பிற்கு பணம் கட்டவேண்டும் என்று சொன்னார். தாவா கிரய ஒப்பந்தம் ஏற்பட்டபோது ரூ.5,00,000/-ஐ ரூ.100/- தாள்களாகத்தான் கொடுத்தார். கிரய ஒப்பந்தம் புதுப்பிக்கும்போதும் ரூ.100/- நோட்டுக்களாகத்தான் கொடுத்தார். இரண்டு நாட்களுக்கு முன்பாக கடைசியாக தாவா இடத்தை பார்த்தேன். பிரதிவாதியை 2 மாதங்களுக்கு முன்பாக பார்த்தேன். பிரதிவாதி எந்த வழக்கும் முடியவில்லை என்று சொல்லிவிட்டார். என்னிடம் காட்டப்படும் கிரய ஒப்பந்தத்தில் 2 மற்றும் 3ம் பக்கத்தில் காணப்படும் பிரதிவாதியின் கையெழுத்துக்கள் கலர் ஜெராக்ஸ் என்று சொன்னால்

சரியல்ல. கிரய காலநீட்டிப்பு என்று எழுதப்பட்டுள்ள வாதி, பிரதிவாதி கையெழுத்து போடப்பட்டுள்ளதற்கு முன்னால் 1 மற்றும் 2 என்ற எண்கள் வெவ்வேறு மையினால் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(வேண்டுகோளின் பேரில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)